Vol.30 | No. 10| OCTOBER 2026

The Official Organ of the Diocese of Thuckalay

இறையருள்

October -The Month of Rosary

MISSION VISIT TO AMERICA

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 30 NO : 9 OCTOBER 2026

இறையருள்
IRAIARUL

உள்ளே...

BISHOP'S MESSAGE	02
ஆயர் சுற்றுமடல்	08
உயர் பேராயர் சுற்றுமடல்	16
மறைக்கல்வி	23
குழந்தை ஈசோ இயக்கம்	25
உறவிய மலர்	26
கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்	29
வின்சென்ட் தே பவுல் சபை	31
மறைமாவட்ட செய்திகள்	32
மறைவட்ட செய்திகள்	33
தென்காசி மறைதள செய்திகள்	41
MONTHLY AGENDA - October 2026	42
BISHOP'S ENGAGEMENTS - October 2026	44

Editorial Board

Patron
His Excellency
Mar George Rajendran SDB

Chief Editor
Fr. Thomas Kuzhikodil

Associate Editors
Fr.Thomas Sathiyanesan
Mr. S.M.Edwinson

Published by:
Fr. Thomas Kuzhikodil
Bishop's House
Post Box No . 12
Thuckalay - 629 175
K.K.Dist,Tamil Nadu,India.

Design & Layout
Merin Sujith M.R

Printed at
Pulari Offset Press
Thuckalay
Ph:04651-252570

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/186/2026 **30 September 2026**

Dear Readers,

Greetings from Houston, Texas

I write to you as I conclude a month-long visit to the United States of America, where I met the benefactors, friends, and well-wishers of our Eparchy.

Everyone received me with great warmth. Many of our own Syro-malabar people from Kerala, now settled in America, welcomed me into their homes. More than once, they asked about the priest who baptised them, prepared them for First Holy Communion, or blessed their marriage. They remember the priests who formed them. It reminded me how deep and lasting a priest's influence can be, often far beyond what we see in our daily ministry.

I also met benefactors who support our seminarians, our schools, our care for the poor, and our mission works, many of whom have never seen Thuckalay. I thanked them on behalf of each of you and assured them of our prayers. I ask each of you to remember our benefactors, living and departed, at the Holy Qurbana this month, and to keep alive in your parishes a spirit of gratitude toward those who help us.

In particular, I met many benefactors and friends who are helping us build our new Cathedral. They have embraced this project as their own, and several expressed their joy at sharing in the mother church of our Eparchy. The Cathedral will be a sign of the unity of our local Church around the altar and a home of prayer for generations to come. I ask you to remember these benefactors and friends by name in your prayers, to offer the Holy Qurbana for their intentions, and to keep our people informed and involved, so that every parish may feel that the Cathedral is truly theirs.

Pope Leo XIV and the Month of the Holy Rosary

The Church dedicates October to the Holy Rosary, and on 7 October we keep the feast of Our Lady of the Rosary. This year the month comes to us with a special call from the Successor of Peter himself.

From 25 to 28 September 2026, our Holy Father, Pope Leo XIV, made an Apostolic Journey to France. He prayed at the restored Cathedral of Notre-Dame in Paris, spoke at UNESCO on human dignity in the age of artificial intelligence, and concluded his visit in Metz. The heart of the journey, however, was his pilgrimage on Sunday, 27 September, to the Sanctuary of Our Lady of Lourdes, where the Immaculate Virgin appeared eighteen times in 1858 to the poor fourteen-year-old girl Saint Bernadette Soubirous at the Grotto of Massabielle.

At Lourdes, the Holy Father met the bishops of France, celebrated the Holy Eucharist with about 150,000 pilgrims, met about 5,000 sick people and their caregivers, and, in the evening, led the great candlelight Rosary procession. He came, as he said, "a pilgrim among pilgrims." I wish to share with you the heart of what he taught there, because it speaks directly to us as priests and shepherds of our people.

Mary, Mother of priests. In the candlelight procession, the Pope walked behind the statue of Our Lady, a candle in one hand and a rosary in the other, as the Glorious Mysteries were prayed. He noted that the pilgrims had come in response to Our Lady's request, conveyed to the priests of Lourdes through Bernadette, that people should come there in procession. It is worth pausing on this: Mary addressed her request to priests. She still asks us to lead our people to her Son. Contemplating her Immaculate Conception, the Holy Father described her as glorious and powerful, yet humble and very close to us: "She is the mother of Jesus, and she is our mother." A priest who loves Mary and prays her Rosary faithfully will rarely lose his way.

Conversion begins with the shepherds. In his homily, the Pope said that the message Mary entrusted to Bernadette is a call to conversion, both tender and urgent. "It is today, not tomorrow, that we must repent," he said. He recalled Our Lady's words that she did

not promise Bernadette happiness in this world but in the next, and he warned that a culture absorbed in comfort and progress easily forgets eternal life. The only obstacle to God's love, he said, is sin.

He then turned this call to the Church herself, saying she must have the courage to begin with her own conversion and to place herself humbly under the Lord's purifying gaze, so that her wounds, infidelities and failures may be healed. In France he also met privately with victims of abuse by clergy. Dear Fathers, this word is addressed first of all to us. Our people have a right to holy priests. Let us honestly examine our prayer, our use of time and money, our relationships, and our availability to the people, and let us not delay what the Lord asks of us.

The sick at the centre of our ministry. At Lourdes, the Pope met some 5,000 sick people and carers. He told them that suffering offered in love shares in Christ's redemptive work and that their place in the Church is irreplaceable. Against current trends that treat the sick and the elderly as a burden, he said that at the Grotto no one is turned away because of frailty, and he praised the French bishops for opposing the legalisation of assisted dying. Our own people are not untouched by these attitudes. The sick, the elderly and the dying must remain the first concern of every parish priest: regular visits, Holy Communion for the housebound, and the Anointing of the Sick administered in good time, not at the last moment.

The light of hope. As the pilgrims lifted their candles, the Holy Father said that the light guiding them is the light of hope, which never abandons us, even when life is full of trials. He recalled how Pope Pius XII marvelled that nowhere on earth was there such a procession of suffering, yet such radiance of peace and joy. People come to us carrying burdens. Our task is to give them that light.

The Rosary for peace. At the Angelus after Holy Mass, the Pope made an appeal he said was particularly close to his heart. Since Our Lady appeared to Bernadette with a rosary and guided her in prayer, he invited all the faithful and Christian communities to pray the Rosary throughout October "that wars may cease and that peace may be established among peoples in conflict." He asked that this

prayer be accompanied by concrete acts of penance and mercy and by a commitment to dialogue and reconciliation. A worldwide week of prayer, begun with children at the Lourdes Grotto in the Vatican Gardens on 1 October, culminates on 7 October, the feast of Our Lady of the Rosary.

Our Marian Devotions

Dear Fathers, I ask you to make the Holy Father's appeal known in your parishes and institutions, and to lead your people in answering it. In particular:

1. Your own Rosary first. Before we ask our people to pray, let us pray. I request each priest to pray the full Rosary daily this month, for peace in the world and for the sanctification of the clergy of our Eparchy. Where possible, pray it with your assistant priests or the religious community near you.

2. The Rosary in the parish. Arrange the Rosary before the Holy Qurbana each day in October. Encourage every family unit to pray it together at least once a week and visit some of these gatherings yourself.

3. Promote the Family Rosary. In your Sunday homilies, explain the Pope's appeal and urge families to return to the evening Rosary. Encourage parents and grandparents to teach children the mysteries.

4. Children for Peace. Through the catechism teachers and school managers, let children offer a Rosary for peace during the week of 1 to 7 October, in union with the children who prayed with the Holy Father in Rome.

5. Penance and mercy. Make the Sacrament of Reconciliation more available this month, with extra hours of confession, especially before the feast of 7 October. Propose simple acts of penance and works of mercy and help heal quarrels in families and among neighbours.

6. A day for the Sick. Set aside one day in October to pray the Rosary with the sick of your parish, take Holy Communion to the housebound, and administer the Anointing of the Sick where needed.
Annual Retreat

Our annual priests' retreat will be held from 4 to 9 October 2026, and I will join you as I am returning from America. I thank all of you who used our thirty days of spiritual preparation well, as well as the religious and contemplative sisters and the sick who prayed for us. Providentially, the retreat falls during the week the Holy Father has set apart for the Rosary for peace, including the feast of Our Lady of the Rosary. As Pope Leo reminded us at Lourdes, conversion must begin with the Church herself. Let us place ourselves under the Lord's purifying gaze and seek renewal in our first love for Christ and His people. Every priest is expected to attend, and anyone unable to attend for a serious reason should inform me in advance. Please give the phone number of Vicar General for emergency such as funerals and sick calls in your parish so that no one is left without pastoral care, and let us keep the silence of the retreat faithfully.

Eparchial Rosary Procession

This October our Eparchy will hold its 25th Eparchy-level Rosary procession, led by the Legion of Mary (Marian Senai). In this silver jubilee year, we thank God for the Legion's faithful apostolate and thank the priests who have served as their Spiritual Directors. As the Holy Father led a procession of light with Mary at Lourdes, let our procession be our own answer to the same invitation. I ask every parish priest to announce it in advance and encourage families, youth, children, religious, and associations to take part. Please support the Legion with transport and banners, and accompany your people yourself as far as possible, as we pray for peace in the world, for our families, our youth and the holiness of our priests.

Dear brother priests, the Holy Father went to Lourdes as a pilgrim among pilgrims, and he reminded the Church that Mary always leads us to her Son. Let us take the rosary into our own hands each day, so that we may lead our people with credibility. May this month, and our retreat, renew us in holiness, in joy and in closeness to the people entrusted to us.

October is also the Mission Month, and this year, as you are aware, our Syro-Malabar Church joins the universal Church in celebrating the 100th World Mission Day on Sunday, 18 October 2026, a century

after Pope Pius XI established it in 1926. In fact, we observe the entire month of October as the Mission Month. For his message, Pope Leo XIV has chosen the theme “One in Christ, united in mission.” He reminds us that the more closely we are united to Christ, the better we can carry out together the mission He entrusts to us, and that “no baptised person is exempt from or indifferent to mission.” For our Church, born of the apostolic faith of St Thomas and sending missionaries across India and the world, this call to unity and mission is especially close to our hearts. Two days before Mission Sunday, we keep the feast of Bl. Kunjachan, a humble missionary of the poor and a model for every priest. Let us encourage our people to pray for our missionaries, priests, and religious working in mission territories, and to contribute generously to the Mission.

May our Blessed Mother intercede for each one of us!

Yours in Christ

☦ George Rajendran SDB
Bishop of Thuckalay

DIOCESE OF THUCKALAY
MAR GEORGE RAJENDRAN SDB
Bishop of Thuckalay

BISHOP'S HOUSE
P. B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari - 629 175
Tamilnadu, India
bpgeorgerajendran@gmail.com

ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே, அருட்சகோதரிகளே, இறை மக்களே, நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோமெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

"மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம், எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40), அருகிலிருக்கும் சகோதரரை அன்பு செய்வது இறைவனை அன்பு செய்வதாகும் என்று இறைமகன் கூறுகிறார். இறைவனின் மாறாத அன்பிற்கும். நம்மை வழிநடத்தும் அவரது பராமரிப்பிற்கும் நன்றி செலுத்தும் இதயத்துடன், உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடனும் செபத்துடனும் வாழ்த்துகிறேன். அக்டோபர் மாதத்தில் நாம் நுழையும் போது, ஜெபம், திருத்தொண்டுப்பணி மற்றும் பிறரன்பு செயல்கள் ஆகிய மூன்று முக்கியமான ஆன்மீகப் பாதைகளில் ஒன்றிணைந்து பயணிக்க திருச்சபை நம்மை அழைக்கிறது. இம்மாதத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும், பணியும் நம்மை இறைவனின் உயிருள்ள உடனிருப்பை அனுபவிக்கவும், குறிப்பாக ஏழைகள், துன்புறுவோர், கைவிடப்பட்டோர் மற்றும் தேவையில் இருப்போர் ஒவ்வொருவரிலும் இறைவனின் பிரசன்னத்தை உணரவும் வழிநடத்தட்டும்.

1. புனித வின்சென்ட் தே பவுல் திருவிழா – அன்பு மற்றும் சேவைக்கான அழைப்பு

செப்டம்பர் 27 அன்று புனித வின்சென்ட் தே பவுல் அவர்களின் திருநாளை நாம் கொண்டாடுகிறோம். 1581 ஆம் ஆண்டு பிரான்சில் பிறந்த வின்சென்ட் தே பவுல் அவர்கள் குருவாக அருள்பொழிவுபெற்று, தனது குருத்துவ அழைப்பு ஏழைகள் மற்றும் துன்புறுவோருக்கான சேவையுடன் பிரிக்க முடியாத வகையில் இணைந்திருப்பதை உணர்ந்தார். ஏழைகள், நோயாளிகள், ஆதரவற்ற குழந்தைகள், சிறைக்கைதிகள் மற்றும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என துன்புறுவோரின் நலனுக்காக தமது

முழு வாழ்வையும் அர்ப்பணித்தார். புனித லூயிஸ் தே மரிலாக் அவர்களுடன் இணைந்து "பிறரன்பின் மகளிர் சபையை" (*Daughters of Charity*) நிறுவினார். அதேபோல், நற்செய்தியை அறிவிப்பதற்கும் ஏழைகளுக்குச் சேவை செய்வதற்கும் குருக்கள் மற்றும் பொதுநிலையினரைத் தூண்டிய "மறைப்பணியாளர் சபையையும்" (*Congregation of the Mission*) நிறுவினார்.

அவரது வாழ்க்கை நமக்கு ஒரு முக்கியமான உண்மையை நினைவூட்டுகிறது. பிறரன்புப்பணி என்பது வெறுமனே உதவி செய்வது அல்ல. அது கிறிஸ்துவையே சந்திக்கும் ஒரு வாய்ப்பாகும் என்பதை அவர் நமக்கு உணர்த்துகிறார். புனித வின்சென்ட் தே பவுல் இவ்வாறு கூறுகிறார் : "இறைவனை அன்பு செய்வோம் அந்த அன்பை நமது கரங்களின் வலிமையாலும் நமது நெற்றியின் வியர்வையாலும் வெளிப்படுத்துவோம்." என்கிறார். 1833 ஆம் ஆண்டு அருளாளர் ஓசானாம் அவர்களால் தொடங்கப்பட்ட புனித வின்சென்ட் தே பவுல் சபை நமது மறைமாவட்டத்தில் தக்கலை மத்திய பேரவையின் கீழ் சிறப்பான பணிகளை செய்து வருவது பாராட்டுக்குரியது. ஏழைக் குடும்பங்கள், நோயாளிகள், முதியோர், தேவையில் இருப்போர் மற்றும் வாழ்க்கையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்பவர்களை அவர்கள் அன்புடன் அணுகி உதவி செய்து வருகின்றனர். அவர்களின் அமைதியான, தன்னலமற்ற சேவை நற்செய்தியின் அன்பை வெளிப்படுத்தும் அழகிய சாட்சியாகும்.

எனவே, ஒவ்வொரு பங்கும் புனித வின்சென்ட் தே பவுல் திருநாளை செப்டம்பர் 27 ஆம் நாள் நினைவு கூரும்போது ஒரு சிறப்பு பிறரன்புப்பணி நாளாக அந்நாளை கொண்டாடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நம்மைச் சுற்றிலும் பசியுடன் இருப்பவர் எவரும் இருக்கக்கூடாது. ஆகவே நம்மால் தனிமையில் இருப்பவர் மறக்கப்படக்கூடாது. உதவி தேவைப்படுவோர் கைவிடப்படக்கூடாது. நோயாளிகளைச் சந்திப்போம் ஏழைக் குடும்பங்களுக்கு உதவுவோம் தேவையில் இருக்கும் குழந்தைகளை ஆதரிப்போம் இறைவன் நமக்கு அளித்தவற்றை அன்புடன் பகிர்ந்து கொள்வோம். திருத்தூதர் யாக்கோபு இவ்வாறு கூறுகிறார்: "உயிர் இல்லாத உடல்போல, செயலில்லாத நம்பிக்கையும் செத்ததே " (யாக்கோபு 2:26), நமது விசுவாசம் அன்பின் செயல்கள் வழியாக வெளிப்படட்டும். வழக்கம் போல அக்டோபர் 2 ம் தேதி வின்செந்தியர்கள் தேசத்தோடு ஒருநாள்' என்னும் மையசிந்தனையில் இவ்வாண்டு இடைக்கோடு அரசு மருத்துவமனையில் தூய்மைப்பணி செய்வது அனைவரும்

அறிந்ததே. அதிலும் திரளாக பங்கேற்க உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். பிறரன்பு பணியாளர்கள் அனைவருக்கும் புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

2. அக்டோபர் ஜெபமாலை மாதம்

அக்டோபர் மாதம் பாரம்பரியமாக திருச்செபமாலையின் மாதமாக கொண்டாடப்படுகிறது. செபமாலை என்பது அன்னை மரியாளுடன் இணைந்து கிறிஸ்துவின் மறையுண்மைகளைத் தியானித்து செபிக்கும் ஒரு ஆழமான செபமாகும். செபமாலை செபங்கள் திரும்பத் திரும்பச் சொல்லும் வெறும் வேண்டுதல்கள் அல்ல. ஒவ்வொரு மறையுண்மையையும் தியானிக்கும்போது, இயேசுவின் வாழ்க்கை, பாடுகள், இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் நாம் அவருடன் இணைந்து பயணிக்கிறோம். இப்பயணத்தில் இயேசுவிடம் நம்மை வழிநடத்தும் அன்னையாக மரியா நம்முடன் இருக்கிறார்.

திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்: "திருச்செபமாலை மரியாளைப் போல மிகவும் எளிமையானதும் பணிவானதும் அதேவேளை விவிலிய உள்ளடக்கத்தில் இறையியல் செறிவு கொண்ட ஒரு செபமாகும்." "திருச்சபை தொடர்ந்து திருச்செபமாலையை ஊக்குவித்து வருகிறது. குறிப்பாக, குடும்பங்களில் செபமாலை செபிப்பது மிகவும் முக்கியமானது. செபமாலை கலங்கிய உள்ளங்களுக்கு அமைதியைத் தருகிறது. குடும்பங்களை வலுப்படுத்துகிறது. விசுவாசத்தை ஆழப்படுத்துகிறது. வாழ்க்கையின் சிரமங்களை இறைநம்பிக்கையுடன் எதிர்கொள்ள நம்மைத் தயார்படுத்துகிறது. கானாவில் நடந்த திருமண நிகழ்வில் "அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள். (யோவான் 2:5) என அன்னை மரியா கூறிய வார்த்தைகள் நமது வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக அமையட்டும்.

எனவே, அன்பான இறைமக்களே, அக்டோபர் மாதம் முழுவதும் ஒவ்வொரு குடும்பமும், துறவற சமூகமும், பங்கும், நிறுவனமும் தொடர்ந்து திருச்செபமாலை செபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். செபமாலை மீண்டும் மீண்டும் நமது வீடுகளிலும், சமூகங்களிலும், இதயங்களிலும் ஒலிக்கட்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த அழகிய செபத்தை

கற்றுக்கொடுத்து இணைந்து செபியுங்கள். உலக அமைதிக்காகவும், குடும்பங்களுக்காகவும், இறையழைத்தலுக்காகவும், நோயாளிகள் மற்றும் துன்புறுவோருக்காகவும், மறைமாவட்டத்தின் தேவைகளுக்காகவும் நாம் சிறப்பாகச் வேண்டுவோம்.

3. மறைமாவட்ட செபமாலைப் பவனி 25 அக்டோபர் 2026

நாம் அனைவரும் குடும்பமாக ஒன்றிணைந்து நமது மறைமாவட்ட செபமாலைப் பவனியில் பங்கேற்போம். செபமாலைப் பவனி 2026 அக்டோபர் 25 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் தொடங்கி, கல்லுவிளை KKSSS வளாகத்தில் முடிவடையும். அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், துறவற சமூகங்கள், இளைஞர்கள், சிறுவர்கள், குடும்பங்கள் மற்றும் அனைத்து பங்குகளையும் சேர்ந்த இறைமக்கள் அனைவரும் இம்மரியன்னை பக்திப் பயணத்தில் முழுமனதுடன் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன். நமது கைகளில் செபமாலையையும், இதயத்தில் செபத்தையும் ஏந்திக்கொண்டு ஒன்றாக நடப்போம். நமது மறைமாவட்டத்தையும், குடும்பங்களையும், உலகம் முழுவதையும் அன்னை மரியாளின் பாதுகாப்பில் அர்ப்பணிப்போம். பாத்திமா அன்னை கேட்டுக் கொண்டது போல, உலகில் அமைதி நிலவவும், போர்கள் முடிவுக்கு வரவும் தினமும் செபமாலை செபிப்போம். இத்திருச்செபமாலை பவனி வெறும் வெளிப்புற நிகழ்வாக இல்லாமல் அன்னை மரியாளுடன் இணைந்து இயேசுவை நோக்கிச் செல்லும் ஆழமான விசுவாசப் பயணமாக அமையட்டும்.

4. அக்டோபர் – திருத்தொண்டுப்பணி மாதம்

அக்டோபர் மாதம் சிறப்பு திருத்தொண்டுப்பணி மாதமாக கொண்டாடப்படுகிறது. சீரோ–மலபார் திருச்சபையின் ஆயர் பேரவை அக்டோபர் மாதத்தை திருத்தொண்டுப்பணி மாதமாகவும் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. மேலும், அக்டோபர் மாதத்தின் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளும் சிறப்பான திருத்தொண்டுப்பணி உணர்வுடன் கொண்டாடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- முதல் ஞாயிறு உலகளாவிய திருச்சபையின் திருத்தொண்டுப்பணி ஞாயிறு
- இரண்டாம் ஞாயிறு சீரோ–மலபார் திருச்சபையின் திருத்தொண்டுப்பணி ஞாயிறு

- மூன்றாம் ஞாயிறு – தக்கலை மறைமாவட்ட திருத்தொண்டுப்பணி ஞாயிறு
- நான்காம் ஞாயிறு – பங்கு அளவிலான திருத்தொண்டுப்பணி ஞாயிறு

திருத்தொண்டுப்பணி அதாவது திருத்தூதுப்பணி என்பது குருக்கள் மற்றும் துறவறத்தாரின் பொறுப்பு மட்டுமல்ல. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு திருத்தொண்டுப்பணியாளரே. திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவைப் பற்றி சாட்சியமளிக்கும் பொறுப்பை நாம் பெற்றுள்ளோம். நமது வார்த்தைகள், வாழ்க்கை, குடும்பம், சேவை மற்றும் பிறரன்பு வழியாக கிறிஸ்துவின் அன்பை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல அழைக்கப்பட்டுள்ளோம். நமது ஆண்டவர் ஈசோ கூறுகிறார் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 1615) நற்செய்தியை அறிவிப்பதே திருச்சபையின் அடிப்படைப் பணியாகும். ஆலயங்களையும் சமூகங்களையும் தாண்டி, கிறிஸ்துவின் மகிழ்ச்சியை இன்னும் அனுபவிக்காதவர்களிடம் இறையன்பைக் கொண்டு செல்ல நாம் அழைக்கப்பட்டுள்ளோம். எனவே, திருத்தொண்டுப்பணி மாதத்தின் நான்கு ஞாயிறுகளிலும் ஒவ்வொருவரும் முழுமையான திருத்தொண்டுப்பணி உணர்வுடன் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தொண்டுப்பணியாளர்களுக்காகச் செபிப்பதும், அவர்களது பணிகளை ஆதரிப்பதும் நமது வலிமைக்கும் வசதிக்கும் ஏற்ப திருச்சபையின் திருத்தொண்டுப்பணிக்காக தாராளமாக நன்கொடை வழங்குவதும் இத்திருந்தொண்டுப்பணி மாதத்தில் சிறந்ததாக அமையும். புனித பவுல் இவ்வாறு கூறுகிறார் "ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குபுக்கு உரியவர்" (2 கொரிந்தியர் 9:7), திருத்தொண்டு பணிகளுக்கான நமது பங்களிப்பு பணத்தால் மட்டுமல்ல, செபம், நேரம், திறமை, அன்பு, இரக்கம் மற்றும் தனிப்பட்ட சாட்சியம் ஆகியவற்றாலும் அமையட்டும்

5. அருட்தந்தையர்களின் வருடாந்திர தியானம்

நமது அருட்தந்தையர்கள் 2026 அக்டோபர் 4 முதல் 9 வரை வருடாந்திர தியானத்தில் பங்கேற்க உள்ளார்கள். தியான நாட்களில் அருட்தந்தையர்கள் தங்களின் அன்றாடப் பணிகளில் இருந்து

சிறிது விலகி, இறைவனின் முன்னிலையில் அமைதியாக இருந்து, அவரது குரலைக் கேட்டு, தங்களின் குருத்துவ அர்ப்பணிப்பை புதுப்பித்துக்கொள்ளும் அருள்நிறைந்த காலமாகும். எனவே, இத்தினங்களில் நமது அருட்தந்தையர்கள் அனைவருக்காகவும் சிறப்பாகச் செபிக்குமாறு அனைத்து இறைமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இறைவன் அவர்களின் ஆன்மீக வலிமையைப் புதுப்பிக்கவும், ஈசோவின் மீதும் அவரது

மக்கள்மீதும் அவர்களுக்குள்ள அன்பை ஆழப்படுத்தவும், அவரது இரக்கத்தின் உண்மையான கருவிகளாக அவர்களை உருவாக்கவும் வேண்டுவோம்.

6. மறைமாவட்ட சட்ட உதவி மையம்

நமது மறைமாவட்டத்தில் சட்ட உதவி மையம் (Legal Cell) நிறுவப்பட்டு, அதன் அலுவலகம் குழித்துறை நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் LLB அவர்கள் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். சட்ட உதவி தேவைப்படும் மக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவதே இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். நமது மறைமாவட்ட மக்கள் அனைவருக்கும் இதன் சேவைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அடங்கிய துண்டுபிரசுரம் பங்கு தந்தையர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு மறைவாட்டத்தின் சார்பான இந்த சட்ட உதவி மையத்தில் சேவையை பயன்படுத்த உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

7. மறைமாவட்ட முதன்மை பேராலயப் பணிகள்

நமது மறைமாவட்ட முதன்மை பேராலயப்பணிகள் கடந்த ஆறு மாதங்களாக இறைவனின் அருளால் தடையின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் இதற்காக தொடந்து மன்றாட உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் மனதார வழங்கிய ஒருநான் ஊதிய காணிக்கை மற்றும் உண்டியல் காணிக்கைகளுக்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். தொடர்ந்தும் பொருளாதர உதவிகள் செய்ய உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். முதன்மை பேராலயக் கட்டுமான பணிகளுக்காக மறைமாவட்டம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் உங்கள் ஒத்துழைப்பை நான் நாடுகிறேன். முதன்மை பேராலய நிதிக்குழு உறுப்பினர்கள் அக்டோபர் மாதம் முதல் உங்களது ஆலயத்தில் ஞாயிற்றுகிழமை

வந்து உங்களுக்காக திருப்பலி ஒப்புக் கொடுத்து செபித்து உங்கள் இல்லங்களில் நிதி உதவி பெற்றுக் கொள்ள வருவார்கள். தாராள மனதுடன் உதவி செய்ய உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நிதி திரட்டுவதற்காக ஒரு மாபெரும் குலுக்கல் பரிசு சீட்டு நடந்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு பங்கிற்கும் பங்குதந்தையர் வழியாக வழங்கப்படும். பங்கு மக்கள் அதனைப் பெற்றுக் கொண்டு உங்களுக்கு தெரிந்த நபர்கள் வழியாக விற்பனை செய்து நிதி திரட்டவும் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அக்டோபர் மாதத்தில் வழங்கப்படும் இக்குலுக்கல் பரிசு சீட்டு புத்தகங்களை விற்பனை செய்து நவம்பர் 25 ம் தேதிக்குள் பங்குதந்தையிடம் ஒப்படைக்க வேண்டும். குலுக்கல் மறைமாவட்ட நற்செய்தி பெருவிழாவின் கடைசி நாள் 2026 டிசம்பர் 6 ம் தேதி நடைபெறும் என்பதையும் தெரித்துக் கொள்கிறேன்.

8. மறைமாவட்ட தினம்

நமது மறைமாவட்டம் 11.11.1996 இல் உருவானது நமது மறைமாவட்டத்தின் 30ஆம் மறைமாவட்ட தினத்தை இந்த ஆண்டு நவம்பர் 15 ம் தேதி மகிழ்ச்சியுடன் கொண்டாட திட்டமிட்டுள்ளோம். முப்பது ஆண்டுகால நமது மறைமாவட்டப் பயணம், இறைவனின் அளவற்ற அருளுக்கும் பராமரிப்பிற்கும் ஒரு மகத்தான சாட்சியாகும் பின்னோக்கிப் பார்க்கும்போது, நாம் வெறும் ஆண்டுகளையோ சாதனைகளையோ கடந்து வரவில்லை. மாறாக, நமது மறைமாவட்டத்தை இறைவன் எத்தனையோ வழிகளில் ஆசீர்வதித்திருப்பதை பார்க்கிறோம். இந்தருணத்தில் நமது ஆயர்கள், அருட்தந்தையர்கள். அருட்சகோதரிகள், திருத்தொண்டுப்பணியாளர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள், குடும்பங்கள், நன்கொடையாளர்கள். பொதநிலையினர் மற்றும் நமது உள்ளூர் திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைத்த ஒவ்வொருவரின் அர்ப்பணிப்பையும் நன்றியுடன் நாம் நினைவுகூருவோம். திருப்பாடல் ஆசிரியருடன் இணைந்து நாமும் கூறுவோம். ஆண்டவர் நமக்கு அரும்பெரும் செயல்கள் புரிந்துள்ளார், அதனால் நாம் பெருமையுறுகிறோம். (திருப்பாடல்கள் 126:3), எனவே, நமது 30 ஆம் மறைமாவட்ட நாளை முன்னிட்டு, இறைவன் நமக்கு அளித்த அனைத்து அருட்கொடைகளுக்காகவும் ஒன்றிணைந்து நன்றி செலுத்துவோம். வரும் ஆண்டுகளில் நமது மறைமாவட்டத்திற்கு இன்னும் அதிகமான அருளும் ஆசியும் வழங்குமாறு இறைவனை நம்பிக்கையுடன் வேண்டுவோம். இந்த 30ஆம் ஆண்டு விழா, நமது

மறைமாவட்டக் குடும்பத்தோடு நாம் கொண்டுள்ள உறவை இன்னும் ஆழப்படுத்தவும், இறையாட்சியைக் கட்டியெழுப்புவதற்கான நமது அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தவும் வழிவகுக்கட்டும்.

இந்த அக்டோபர் மாதத்தின் அனைத்து நிகழ்வுகளையும் நமது தாய்அன்னை மரியாவின் பாதுகாப்பில் அர்ப்பணிப்போம். அன்னை மரியா இறைவனிடம் கூறிய “ஆம்” என்ற பதிலை நாமும் நமது வாழ்வில் கற்றுக்கொள்வோம். அவர் நம்மை எப்போதும் இயேசுவிடம் அழைத்துச் சென்று, உண்மையான சீடர்களாகவும் மகிழ்ச்சியான தூதுரைப்பணியாளர்களாகவும் வாழ உதவட்டும். புனித வின்சென்ட் தே பவுல் ஏழைகளை அன்புடன் நேசிக்க நம்மைத் தூண்டுவாராக. அன்னை மரியா நம்மை இயேசுவிடம் இன்னும் நெருக்கமாக வழிநடத்துவாராக. தூய ஆவியார் நமது திருத்தொண்டுப்பணி உணர்வை புதுப்பிக்கட்டும் என வேண்டுதல் செய்வோம். இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

ஈசோ மெசியாவில் அன்புடன்

ஆயர் இல்லம்
10.09.2026

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

Mar Raphael Thattil
Major Archbishop of the Syro-Malabar Church

Prot. No. 0572/2026

ஆயர் பேரவைக்கு பிந்தைய சுற்றறிக்கை

சீரோ–மலபார் திருச்சபையின் உயர்ப்பேராயர் மார் ராஃபேல் தட்டில்,
தம்மோடு இணைந்து பணியாற்றும் பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும்,
குருக்களுக்கும், துறவிகளுக்கும், நமது ஆயர் பணிப் பொறுப்பில்
ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்கள் அனைவருக்கும் எழுதுவது!

ஆண்டவரின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஈசோ மெசியாவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

சீரோ–மலபார் திருச்சபையின் 34–ஆவது ஆயர் பேரவையின் இரண்டாம் அமர்வு 2026 ஆகஸ்ட் 17 முதல் 28 வரை திருச்சபையின் தலைமையகமான காக்கநாடு, மவுண்ட் செண்ட் தாமஸில் வைத்து நடைபெற்றது. திருச்சபையின் நம்பிக்கை வாழ்வையும் ஆன்மீகப் பராமரிப்பு செயல்பாடுகளையும் இக்காலகட்டத்தின் சவால்களுக்கு இன்னும் பயனுள்ள வகையில் பதிலளிக்கும் விதமாக புதுப்பிப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான பல்வேறு வழிகள் ஆயர் பேரவையில் விரிவாக ஆலோசிக்கப்பட்டன. ஜெபத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், திருச்சபையின் ஒன்றிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்ற இந்த ஆயர் பேரவை தூய ஆவியாரின் அருளால் ஆயர்கள் ஒன்றாக இறை விருப்பத்தை நாடிய இறையாசி நிறைந்த நாட்களாக அமைந்தது. ஆயர் பேரவைக் கூட்டம் வெற்றியடைய செபித்த அனைவரையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

திருச்சபை சமூகத்தை வலுப்படுத்துதல்

2024 ஆம் ஆண்டு பாலா மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற சீரோ மலபார் மேஜர் ஆர்க்கி எபிஸ்கோப்பல் மன்றத்தின் தொடர்ச்சியாக நாம் சமுதாய வலுப்படுத்துதல் ஆண்டை" கொண்டாடி வருகிறோம். தற்கால உலகின் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள திருச்சபை உறுப்பினர்களின் ஆன்மீக, சமூக வலுப்படுத்துதல் இன்றியமையாத ஒன்று என்ற உணர்வே

நம்மை இந்த கொண்டாடத்திற்கு வழிவகுத்தது. பல்வேறு நாடுகளில் சிதறி வாழும் சமுதாய உறுப்பினர்களை ஒரே நம்பிக்கை சமூகமாக நிலைநிறுத்துவது திருச்சபையுடனான உறவும் திருச்சபை உறுப்பினர்களாக இருப்பதில் உள்ள பெருமித உணர்வுமே ஆகும்.

மக்கள் தொகை குறைவு, திருச்சபை உணர்வு குறைபாடு, விவசாயம் மற்றும் வணிகத் துறைகளில் புதிய தலைமுறையினரின் ஆர்வமின்மை, சமூகத்தின் முதன்மைப் பாதைகளில் நமது பங்களிப்பு இல்லாமை போன்றவை நமது சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும். இச்சவால்கள் நம்மை அஞ்ச வைப்பதற்குப் பதிலாக புதிய செயல்பாட்டுப் பாதைகளைக் கண்டறிவதற்கான ஊக்கமாக மாற வேண்டும். மீட்பரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்ற முறையில், ஆன்மீக உறுதியில் ஆழப்பட்டு இன்னும் அதிக ஆற்றலோடு நற்செய்தியின் சாட்சிகளாக வாழ நாம் முயற்சிக்க வேண்டும். அதோடு, இளம்தலைமுறையை நம்பிக்கையிலும் திருச்சபை உணர்விலும் உறுதிப்படுத்தவும் அவர்களின் திறமைகளையும் அறிவையும் வளர்த்தெடுப்பதற்குமான முயற்சிகள் இன்னும் தீவிரமாக நடக்க வேண்டும். சமுதாய வலுப்படுத்துதல் ஆண்டில் நமது மறைமாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள பல்வேறு செயல்பாடுகள் திருச்சபையையும் சமுதாயத்தையும் வலுப்படுத்தும் என்று ஆயர் பேரவை மதிப்பீடு செய்தது. இதற்காக சுயநலமின்றி உழைக்கும் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

ஆழப்பட வேண்டிய நம்பிக்கை வாழ்வு

குடும்பங்கள், இளைஞர்கள், சிறுவர்களின் நம்பிக்கை உருவாக்கமும் வலுப்படுத்துதலும் திருச்சபையின் பராமரிப்பின் ஒரு பகுதியாகும். உலகமெங்கும் சீரோ-மலபார் திருச்சபை வளர்ந்ததன் பின்னணியில் புலம்பெயர்ந்த மக்களின் நம்பிக்கை ஆர்வம் முக்கிய பங்கு வகித்தது என்பது மறுக்க முடியாத உண்மை. தங்கள் முன்னோர்களின் அதே நம்பிக்கை ஆர்வத்தோடு பிள்ளைகளை வளர்க்க புதிய தலைமுறையின் பெரும்பான்மையான பெற்றோர்கள் முயற்சிக்கிறார்கள் என்பது நமக்கு பெருமையளிக்கிறது. எனினும், இன்று அன்றாட வாழ்வின் தவிர்க்க முடியாத பகுதியாக மாறியுள்ள டிஜிட்டல் உபகரணங்களால் குறிப்பாக சமூக ஊடகங்களால் பாதிக்கப்படுவோரிடம் வெளிப்பட்டு வரும் கலாச்சார நாத்திகத்தின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில், நமது குடும்பங்களின் நம்பிக்கை பயிற்சி மிகுந்த முக்கியத்துவம்

பெறுகிறது. ஒரே மீட்பரான ஈசோ மெசியாவைப் பற்றியும் கிறிஸ்துவின் மறை உடலான திருச்சபையைப் பற்றியுமான புரிதல்கள் நம்பிக்கை வாழ்வின் மூலம் தொடர்ச்சியாக ஆழப்பட வேண்டும் நம்பிக்கை வாழ்வில் குடும்பங்களையும் இளைஞர்களையும் சிறுவர்களையும் காலத்திற்கேற்ப வளர்க்க உதவும் வகையில் ஆயர்பணி செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். மதிப்பீடுகளின் இழப்பு, தனி மனிதவாதம், பொருளாதார நெருக்கடிகள், தலைமுறை இடைவெளி, டிஜிட்டல் கலாச்சாரத்தின் ஆதிக்கம் போன்ற பல்வேறு சவால்களை நமது குடும்பங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலையில், குடும்ப வாழ்விற்கான இறை அழைப்பை மதிக்கவும் திருமணம் என்னும் திருமறைப் பொருளின் அருள்களைப் பெற்றுக்கொள்ளவும் இளைஞர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். அதோடு குடும்பங்களையும் சமூகத்தையும் அழிக்கும் மது, போதைப்பொருள்கள் போன்ற சமூக தீமைகளுக்கு எதிரான போராட்டத்தையும் விழிப்புணர்வையும் நாம் இன்னும் வலுப்படுத்த வேண்டும்.

மறைப்பணிக்கு புதிய ஊக்கம்

நமது நம்பிக்கை வாழ்வின் புதுப்பிக்க இந்தியா முழுவதும் மறைபரப்புப் பணியும் நற்செய்தி அறிவிப்பும் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது முதல், பலவரம்புகளுக்குள் இருந்துகொண்டே நற்செய்திப் பணிகளை சீரோ மலபார் திருச்சபை செய்து வருகிறது. "கிறிஸ்தவனாக இருந்தல் என்றால் நற்செய்தி அறிவிப்பாளராக இருந்தலும் வேண்டும் (*CCC 900*) என்ற உணர்வு நமக்கு இருக்க வேண்டும். "நீங்கள் உலகமெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" (மாற்கு *16:15*) என்ற கட்டளை பெற்றவர்கள் என்ற முறையில், நற்செய்தி அறிவிப்பு நமது வாழ்வில் பிரிக்க முடியாத பகுதியாகும். இந்திய அரசியலமைப்பின் 25-வது பிரிவின் மூலம் எந்த மதத்தையும் நம்பவும், மத சடங்குகளைப் பின்பற்றவும், பிரச்சாரம் செய்யவுமான உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. நமது திருச்சபையின் சேவைகள் நமது நம்பிக்கையில் இருந்து உருவாகி, ஆனால் மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் அரவணைப்பதையே மையமாக கொண்டுள்ளது. ஆனால், கட்டாய மதமாற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து நமது நம்பிக்கை வாழ்வையும் சமுக சேவைகள். கல்விப் பணிகளையும் தடைசெய்யும் காரணிகள் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மைக்கு ஏற்றநல்ல என்பதையும் நாம் உணர வேண்டும்.

2024 ஆம் ஆண்டின் மேஜர் ஆர்க்கி எப்பிஸ்கோப்பல் மன்றத்தின் பரிந்துரைப்படி "ஜீவன் ஜோதி" என்ற பெயரில் பொதுநிலையினருக்கான மறைப்பணி இயக்கம் திருச்சபை சார்பாக தொடங்கப்பட்டுள்ளது. 2033–ஆம் ஆண்டின் மீட்பின் நிகழ்வின் மகா ஜூபிலியை இலக்காகக் கொண்டு திருச்சபை, திருச்சபையின் மறைப்பணிக்கு புதிய உணர்வு தரும் திட்டமாக ஜீவன்ஜோதி உருவாக்கப்படுகிறது. இவ்வியக்கத்தின் பகுதியாக ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைப்பணிகளைத் தொடங்கவும் வலுப்படுத்தவும் அழைப்பு விடுக்கப்படுகிறது. மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் இயேசுவுக்கு சாட்சி பகரும் மறைப்பணியாளர்களை திருச்சபை மிகுந்த அன்போடு வாழ்த்துகிறது.

தீர்வு காணப்பட வேண்டிய வாழ்வாதாரப் பிரச்சினைகள்

கேரளாவைச் சேர்ந்த சில நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களோடு உரையாடி, திருச்சபையும் சமூகமும் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளவும் தீர்வுகளைத் தேடவும் ஆயர் பேரவையின் ஆயர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. தேவையான ஆலோசனைகளுக்குப் பிறகு, நீதிபதி ஜே.பி. கோஷி கமிஷன் அறிக்கையைக் காலவரையறைக்குள் அமல்படுத்த வேண்டும் என்றும், ஆசிரியர் நியமன நெருக்கடி உட்பட கல்வித்துறை எதிர்கொள்ளும் கடுமையான பிரச்சினைகளுக்கும் பல ஆண்டுகளாகத் தீர்வின்றி நீடிக்கும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் பிரதிநிதிகளிடம் முன்வைக்கப்பட்டன. அதோடு, சட்டப்படி செயல்படும் கல்வி மற்றும் சமூக நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பாதிக்கக்கூடிய சட்டங்கள் கொண்டுவரப்படுவதில் உள்ள அச்சமும் பகிர்ந்துகொள்ளப்பட்டது. நாட்டின் சட்டங்களையும் அரசியலமைப்பு உரிமைகளையும் மதித்து செயல்படும் நிறுவனங்களைப் பாதிக்கும் சட்ட விதிகள் உருவாவது மிகுந்த கவலையளிக்கிறது. அதேவேளையில், கடினமான பாதைகளில் பயணித்துக்கொண்டுதான் திருச்சபை என்றும் உலகின் ஒளியாக நிலைபெற்றுள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது. சவால்களைக் கடந்து உண்மைக்கும் நீதிக்கும் மனித கண்ணியத்திற்கும் ஆதரவாகக் குரலெழுப்பி சமூகத்தின் நன்மைக்கான திருச்சபையின் பணியை இன்னும் வலுவாக நாம் தொடர்வோம்.

ஒன்றிப்பு நமது பொறுப்பு

பிரச்சினைகளும் சவால்களும் இருந்தாலும், விண்ணிலும் மண்ணிலும் அனைத்து அதிகாரமும் பெற்றுள்ள" (மத்தேயு 28:18) நமது ஆண்டவரிடமே நமது நம்பிக்கை உள்ளது. "ஆண்டவர் கூடவே நடக்கும் மக்கள்" என்ற முறையில் (விப 33:14) இன்று உறுதியோடு முன்னேற வேண்டியவர்கள் நாம். நமது திருச்சபையின் ஒன்றிணைந்த பயணத்தில் ஒரு பெரிய மைல்கல் பலிபீடத்தின் ஒன்றிப்பாகும். வெவ்வேறான திருப்பலி ஒப்புகொடுக்கும் முறைகள் நமது திருச்சபையின் ஒன்றிப்பு உணர்வை ஆழமாகப் பாதித்தது என்ற உணர்வில்தான் 1999 முதல் ஒன்றிப்பு முயற்சிகள் தொடங்கப்பட்டன. அதை முழுமையாக அமல்படுத்த முடியாமல் போனது வருத்தத்திற்குரியது. ஆனால் சொற்களால் ஒருவரையொருவர் காயப்படுத்தி ஒருபோதும் ஒன்றிப்பை சாத்தியமாக்க முடியாது என்பதை நாம் உணர வேண்டும். திருத்தந்தை பதினான்காம் லியோ அழைப்பு விடுத்தது போல, "நமது வார்த்தைகளை ஆயுதமற்றதாக்குவோம் அதன்மூலம் உலகை ஆயுதமற்றதாக்க நாம் உதவுவோம். எனவே பயன்படுத்தும் வார்த்தைகள், நம்மிடம் உள்ள முன்முடிவுகள், அவற்றில் மறைந்துள்ள அல்லது வெளிப்படையாக உள்ள வன்முறைப் போக்குகள் குறித்து நாம் அனைவரும் ஆத்ம பரிசோதனை செய்ய வேண்டும் (மனித மாண்பு. 214)

தொடர் ஜெபமும் தனிப்பட்ட மனமாற்றமும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு மட்டுமே நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும். "நீதியின்றி அமைதி நிலவாது" என்ற உண்மையை ஏற்றுக்கொண்டாலும், நீதியற்ற வழக்குகள் வழியாக அல்ல திருச்சபையில் அமைதியைப் பெற வேண்டும் என்பதை அனைவரும் உணர வேண்டும், வெற்றி தோல்விகளில் அல்ல. சிலுவையில் அறையப்பட்டவரின் கீழ்ப்படிதல் வழியாகவே மீட்பு கிடைக்கிறது. இறை அருளை நம்பி ஆயர்களின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு ஒன்றிப்பின் தூதர்களாக மாற நாம் முயல்வோம். "இறை அருள் மோதல்களை உடனே மாயாஜாலமாக இல்லாமல் ஆக்குவதில்லை. மாறாக, அது தீமைக்கு எதிரான உயிரோட்டமிக்க எதிர்ப்பிற்கும், நிலையை வெல்வதில் உள்ள அதிசய படைப்பாற்றலுக்கும் ஊக்கமளிக்கிறது". (மனித மாண்பு, 211) என்ற திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் போதனை மிகவும் பொருத்தமானது. நன்மையின் புதிய பரிமாணங்களைத் தேடி எல்லைகளைக் காக்க நாம் முயற்சிப்போம்.

காலத்திற்கேற்ற குருத்துவப் பயிற்சி

குருந்துவ இறை அழைப்புகளால் திருச்சபையை வளப்படுத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம். தற்கால உலகில் குருக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் ஆயர்பேரவையில் விவாதிக்கப்பட்டு, தேவையான தலையீடுகளைச் செய்ய குருக்களுக்கான ஆணையத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. குருத்துவ மாணவர்களின் பயிற்சியைக் காலத்திற்கேற்ப புதுப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டம் குருத்துவ கல்லூரி முதல் தொடங்கப்பட்டது மகிழ்ச்சிகரமானது. நம்பிக்கை ஆர்வத்தால் நிறைந்து திருச்சபையின் மனிதர்களாக கிறிஸ்துவுக்கு சாட்சி பகர குருக்களால் முடியும் போதுதான் உலகின் எல்லைகள் வரை நற்செய்தி பரவுகிறது.

துறவற வாழ்விற்கான இறை அழைப்புகளைப் பற்றியும் திருச்சபை இறைவனுக்கு நன்றி கூறுகிறது. இறை சமூகங்கள் வழியாக அதிகமான இறையருளை இறைவன் நமக்கு பொழிகிறார். கருணைசார்கல்வி அறப்பணி தியாகத்தோடு பணியாற்றும் துறவிகள் நற்செய்தியின் நறுமணத்தை உலகில் பரப்புபவர்களாக திகழ்கின்றனர். எனவே துறவற வாழ்விற்கான இறை அழைப்புகளை ஊக்குவிப்பதும் செபிப்பதும் அவசியமாகும். ஆயர்பேரவை கூட்டத்தில் பகுதியாக துறவற சமூகங்களின் அதிகாரிகளோடு நடத்திய சந்திப்பு மிகவும் பலனுள்ளதாக இருந்தது.

சீரோ – மலபார் மரபுசார் மற்றும் ஆய்வு நிலையம்

சீரோ–மலபார் திருச்சபையின் பழமையான, வளமான பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும். கற்பிக்கவும், ஆராய்ச்சிகள் செய்யவும் உதவும் ஹெரிட்டேஜ் அண்ட் ரிசர்ச் சென்டரைப் பொதுச் சமூகத்திற்காகத் திறந்து கொடுக்க நம்மால் முடிந்தது. இங்கு அமைக்கப்பட்டுள்ள சென்ட் தாமஸ் ஹெரிட்டேஜ் அருங்காட்சியகம் கேரளாவின் முக்கியமான கிறிஸ்தவ அருங்காட்சியகங்களில் ஒன்றாகும். காக்கநாடு மவுண்ட் சென்ட் தாமஸில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பாரம்பரிய மையத்தையும் அருங்காட்சியகத்தையும் பார்வையிட அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன்.

கோட்டயம் உயர்மறைமாவட்டத்திற்கு உதவி ஆயர்

கோட்டயம் உயர்மறைமாவட்டத்தின் உதவி ஆயராக மதிப்பிற்குரிய அருட்தந்தை ஆனிமூட்டில் தாமஸ் அவர்களை நியமித்தது சீரோ மலபார் திருச்சபை முழுமைக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும்

மதிப்பிற்குரிய அருட்தந்தை தாமஸ் அவர்களுக்கு அனைத்து இறை ஆசிகளும் கிடைக்க செபிப்பதோடு அவரது பணிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

இறை பராமரிப்பில் நடைபெற்ற ஆயர்பேரவை, நமது திருச்சபையை இறை விருப்பத்திற்கு ஏற்ப உருவாக்குவதற்கான புதிய பொறுப்புணர்வை நம்மில் எழுப்புகிறது. பிரச்சினைகளில் தளராமல், சவால்களில் கலங்காமல், ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து நம்பிக்கையிலும் ஒன்றிப்பிலும் மறைப்பணி ஆர்வத்திலும் நாம் முன்னேறிச் செல்வோம்."

கேரளாவில் பருவமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட பேரிடர்களில் துன்பப்படுவோரின் குடும்பங்களோடு நமது திருச்சபையின் இதயப்பூர்வமான ஒற்றுமையை பதிவு செய்கிறோம். அதோடு நேபாளத்தில் நடந்த கொடூரமான இயற்கை பேரிடரில் அன்பானவர்களை இழந்தவர்களின் வேதனையில் பங்கெடுப்பதோடு வீடும் வாழ்வாதாரமும் இல்லாமல் போனவர்களுக்காக செபிக்கவும் செய்கிறோம்.

தூய கன்னி மரியா, மார் தோமா, நமது திருச்சபையின் அனைத்துப் புனிதர்கள் மற்றும் அருளாளர்களின் பரிந்துரையை வேண்டி, நமது திருச்சபையையும் குடும்பங்களையும் ஆண்டவரின் கரங்களில் சமர்ப்பிப்போம். தூய ஆவியார் தமது பயணத்தை வழிநடத்தி கிறிஸ்துவோடு இணைந்த ஒரு திருச்சபையாக இன்னும் உறுதியோடு நற்செய்திக்கு சான்று பகர நம்மை ஆசீர்வதிப்பாராக.

காக்கநாடு மவுண்ட் சென்ட் தாமஸில் உள்ள உயர்பேராயர் அலுவலகத்தில் இருந்து 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ஆம் தேதி வழங்கப்பட்டது.



"உலகெங்கும் சென்று
படைப்பிற்கெல்லாம்
நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்பண்டு. [உரோமையர் 10:17]

11.ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சி-

மறைக்கல்வி 11-ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கான புதிய புத்தக பயிற்சி வகுப்பு செப்டம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் 5.00 மணி வரை இயக்குநர் அருட்தந்தை. டோஜி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருள்முனைவர். கிறிஸ்துதாஸ் அவர்கள் புதிய பாட புத்தகத்தின் உள்ளடக்கம் மற்றும் கற்பித்தல் முறைகள் குறித்து மிகச்சிறப்பாக வகுப்பு நடத்தினார். சுமார் 35 ஆசிரியர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டனர்.

தலைமையாசிரியர்களின் கூட்டம்

மறைக்கல்வியின் தலைமையாசிரியர்களின் 2 ஆவது கூட்டம் 2026 செப்டம்பர் 12 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் இயக்குநர் அருட்தந்தை. டோஜி அவர்களின் தலைமையில் துய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை. டோஜி அவர்கள் விவிலியக்கலைவிழாவைப் பற்றியும் மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு தேவையான புது முயற்சிகளை எடுக்கவும் வேண்ட கருத்துக்களை பகிர்ந்து

கொண்டார். மேலும் மறைவட்ட அளவில் நடக்கும் எழுத்துப்போட்டிகள் மற்றும் கலைப்போட்டிகள் நடக்கும் இடம் மற்றும் தேதி அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது அனைத்து தலைமையாசிரியர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர் இறுதி செபத்துடன் கூட்டம் 4.30 மணியளவில் நிறைவுற்றது.

மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி

11 -ம் பிரிவு மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் 2026 செப்டம்பர் 14 திங்கட்கிழமை சூசைபுரம், புனித சூசையப்பர் மறைவட்ட ஆலய அரங்கில் இயக்குநர் அருட்தந்தை. டோஜி அவர்களின் தலைமையில் பேரருட்தந்தை. ஜோண்சிலால் அரக்கப்பறம்பில் மற்றும் சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை. குரியன் கறுத்தேடம் அவர்கள் முன்னிலையில் ஆரம்பமானது. காலை 9.00 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. முதல் அமர்வு மறைக்கல்வி அறிமுகம் குறித்து அருட்தந்தை. டோஜி அவர்களும் இரண்டாவது அமர்வு திருவழிபாடு மற்றும் நுழைவு அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. ஜஸ்டின் செறுவேலில் அவர்களும், மூன்றாவது அமர்வு ஒழுக்க இறையியல் பத்து கட்டளைகள் நற்பண்பு பாவம் மற்றும் மனசாட்சி பற்றி அருட்தந்தை. ஷிஜோ ஐக்கரகுந்நேல் அவர்களும் சிறப்பாக வகுப்புகள் நடத்தினார்கள். பயற்சி வகுப்பின் நான்காவது அமர்வு செப்டம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை குணமளிக்கும் அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. தோமஸ் சத்தியநேசன் அவர்களும் வகுப்புகளை வழிநடத்தினார்கள்.

அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்
இயக்குனர்

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

குழந்தை ஈசோ இயக்கம்

கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை [லூக்:1:37]

குழந்தைகளுக்கான ஆன்மீக வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக குழந்தைகளுக்கு மறைவட்ட அளவில் வண்ணம் தீட்டும் போட்டி நடைபெற்றது. ஏராளமான குழந்தைகள் இப்போட்டியில் பங்கெடுத்தனர். ஒவ்வொரு மாதமும் குழந்தைகளுக்கு task கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் சரியான முறையில் task செய்து அனுப்பி வைக்கப்படுகிறது. குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் மறைமாவட்ட இயக்குநர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்தந்தை ஜோஸ் புரைபிடத்துக்குந்நேல்
இயக்குநர்

FEASTDAYS OF REV. FATHERS - OCTOBER 2026	
Fr. Shoji Puthenpurackel	09
Fr. Luka Kollamparampil CMI	18
Fr. John Paul Puthuvalputhen	22

உறவிய மலர்

மறைவட்ட அளவிலான கருத்தரங்குகள் மற்றும் உறவிய கையேடு பயிற்சி

உறவிய ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு மறைவட்ட அளவிலான கருத்தரங்கு மற்றும் உறவியக் கையேட்டைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி செப்டம்பர் 6, 13, 20 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் முறையே நித்திரவிளை, பிலாங்காலை, சூசைபுரம் மறைவட்டங்களில் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் மதியம் 2.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது.

ஒவ்வொரு மறைவட்டத்தின் முதன்மைக் குருவும் தொடக்க உரையாற்றிக் கருத்தரங்கினை தொடங்கி வைத்தார். மறைமாவட்ட உறவிய இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் கருத்தரங்குகளை வழிநடத்தி, உறவியக் கையேட்டை அறிமுகப்படுத்தினார். மேலும், கையேட்டைப் பயன்படுத்தும் முறைகள் குறித்த விரிவான பயிற்சியையும் வழங்கினார். கருத்தரங்குகளின் போது ஒவ்வொரு மறைவட்டத்திற்குமான உறவியச் செயற்குழுக்களும் அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு மறைவட்ட இயக்குநரும், மறைவட்ட உறவிய ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தரங்குகளைச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர். மறைமாவட்ட உறவிய ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி லிசா SH அவர்கள் அனைவரையும் தொடர்புகொண்டு, பொறுப்பாளர்களின் பங்கேற்பை உறுதிசெய்ததுடன், ஏற்பாடுகளையும் சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

சூசைபுரம் மறைவட்டம்

சூசைபுரம், புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தில் உறவியத் தலைவர்களை ஒன்றிணைத்து, பாப்புலர் மிஷன் தியானம் நடத்துவதற்கான ஆலோசனைகளைப் பேரருட்தந்தை ஜோன்ஸிலால் அவர்கள் வழங்கினார். பங்கேற்பாளர்கள் இரண்டு குழுக்களாக இணைந்து, “ஜெயவாக்கியம்” முழக்கத்துடன் ஆலயத்தைச் சுற்றி ஊர்வலமாகச் சென்றனர். தியான நிகழ்வில் உறவிய இறைமக்கள் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினர்.

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில், செப்டம்பர் 13 அன்று புனித அந்தோணியார் உறவியத்தின் ஆண்டு விழா மாலை 5.00 மணிக்குத் தொடங்கியது. பங்குத்தந்தை அருட்தந்தை எபி பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பங்குத்தந்தை தலைமை உரையாற்றினார், திரு. ரீகன் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

மாங்கரை புனித ஜேம்ஸ் ஆலயத்தில், செப்டம்பர் 1 முதல் 8 வரை தினமும் மாலை 6.00 மணிக்கு உறவியங்கள் சார்பில் ஜெபமாலை நடைபெற்றது. இறுதி நாள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

செப்டம்பர் 20 அன்று கோட்டைவிளை புனித ஆரோக்கிய மாதா உறவியத்தின் ஆண்டு விழா, திரு. ஷாஜூ அவர்களின் இல்லத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் ஜெபமாலையுடன் நிகழ்வு தொடங்கியது. கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. பங்குத்தந்தை தலைமை உரையாற்றினார்; அருட்சகோதரி மார்கிரட் SABS அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

கிள்ளியூர் தூய தேவமாதா ஆலயத்தில், செப்டம்பர் 6 அன்று மாலை 7.00 மணிக்கு அனைத்துப் பக்த இயக்கங்கள் மற்றும் உறவியங்களின் ஆண்டு விழா நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தலைமையேற்றார். பங்குத்தந்தை அருட்தந்தை குரியன் கருத்தேடம் OSB அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

களியல் மறைவட்டம்

களியல் தூய மரியன்னை மறைவட்ட ஆலயத்தின் பாதுகாவலித் திருவிழாவுடன் இணைந்து, செப்டம்பர் 8, செவ்வாய்க்கிழமை திருப்பலிக்குப் பிறகு அனைத்து உறவியங்களின் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பங்குத்தந்தை பேரருட்தந்தை மேத்யு அறைக்களம் CMI அவர்கள் தலைமையேற்றார். பிலாங்காலை புனித குழந்தை தெரேசா மறைவட்ட ஆலயத்தின் முதன்மைக் குரு பேரருட்தந்தை ரெனி களத்தில் CMI அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அனைத்து உறவியங்களின் சார்பில்

பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மாறப்பாடி, புனித தோமையார் ஆலயத்தில் சகாயமாதா உறவிய இறைமக்கள், உறவியத்தின் பாதுகாவலியான தூய கன்னிமரியாவின் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். திருப்பலியின் முன்னுரை, காணிக்கைப் பவனி, வாசகங்கள், ஆலய அலங்காரம், ஆலயத் தூய்மைப் பணி, ஜெபமாலைப் பவனி ஆகியவற்றை உறவிய இறைமக்கள் பொறுப்பேற்று நடத்தினர். சிறப்பு ஜெபத்துடனும் நிகழ்வுகள் வழிநடத்தப்பட்டது. இறுதியில் உறவியத்தின் சார்பில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

படந்தாலுமூடு மறைவட்டம்

அண்ணிக்கரை புனித மத்தேயு ஆலயத்தின் பாதுகாவலர் திருவிழாவுடன் இணைந்து, செப்டம்பர் 30, புதன்கிழமை திருப்பலிக்குப் பிறகு அனைத்து உறவியங்களின் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பங்குத்தந்தை அருள். முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையேற்றார். மறைமாவட்ட உறவிய இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அனைத்து உறவியங்களின் சார்பில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
இயக்குனர்

BIRTHDAYS OF REV. FATHERS - OCTOBER 2026	
Fr. Ajin C Joseph	04
Fr. Linto Thakadiyel	05
Fr. Sinu Panickaparampil CMI	15
Fr. John Joseph	17
Fr. Joseph Kollamparampil MCBS	19
Fr. Kurian Mathew Koipuram	20
Fr. Bibin Kocheethra	26

கன்னியாகுமரி
சமூக சேவை சங்கம்

இளம் களப்பணியாளர்களுக்கான பயிற்சி

இளம் களப்பணியாளர்களின் திறனையும் சமூகப் பணிக்கான புரிதலையும் வளர்க்கும் நோக்கில், KKSSS சார்பில் 28.09.2026 அன்று கல்லுவிளை KKSSS அரங்கில் வைத்து நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில், KIDS திட்ட அலுவலர் அருட்சகோதரி மைக்கேலம்மா SDS சிறப்பு விருந்தினராகவும் பயிற்சியாளராகவும் கலந்து கொண்டார். சமூக சேவையின் பல்வேறு பரிமாணங்கள், களப்பணியின் தன்மை மற்றும் அதன் முக்கியத்துவம்

குறித்து முதல் அமர்வில் பயிற்சி வழங்கினார். தொடர்ந்து, களத்தில் அனிமேட்டர்களின் பொறுப்புகள், செயல்பாடுகள் மற்றும் மக்களுடன் இணைந்து பணியாற்றும் முறைகள் குறித்து அருட்தந்தை மகேஷ் ஆண்டனி விளக்கினார். 16 புதிய இளம் ஊக்குவிப்பாளர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பயனடைந்தனர்.

தையல் பயிற்சி – நிறைவு விழா

ஒருநூறாம்வயல் பகுதியில் பெண்களின் திறன் மேம்பாடு மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் கன்னியாகுமரி

சமுக சேவை சங்கம் சார்பில் நடைபெற்ற மூன்று மாத தையல் பயிற்சியின் நிறைவு விழா, 22.09.2026 அன்று ஒருநூறாம்வயல் மண்டபத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. 15.07.2026 முதல் 19.09.2026 வரை நடைபெற்ற இப்பயிற்சியில் மொத்தம் 17 பயிற்சியாளர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தையல் மற்றும் ஆடைத் தயாரிப்பு தொடர்பான நடைமுறைத் திறன்களைப் பெற்றனர். பயிற்சியை தையல் ஆசிரியர் திருமதி. விஜி, அர்ப்பணிப்புடன் வழங்கினார். நிகழ்ச்சிக்கு இயக்குநர் அருட்பணி. மகேஷ் ஆண்டனி, தலைமை தாங்கினார். பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை களப்பணியாளர் திருமதி. ஷோபா, சிறப்பாக மேற்கொண்டார்.

Educare வகுப்புகள்

கன்னியாகுமரி சமுக சேவை சங்க செப்டம்பர் மாத Educare வகுப்பு 28 செப்டம்பர் 2026 அன்று காலை 10.00 மணிக்கு சிறப்பாகத் தொடங்கியது. 39 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். அருட்சகோதரர் வின்சிலின் சேவியர் அவர்கள் பொது மேடைப் பேச்சு, தன்னம்பிக்கை மற்றும் நேர்மறை சிந்தனை குறித்துப் பயிற்சி அளித்தார். கலந்துரையாடல்கள், விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் தெளிவாகப் பேசுதல், தயக்கத்தைத் தாண்டுதல், தன்னம்பிக்கையுடன் செயல்படுதல் ஆகிய வாழ்க்கைத் திறன்களைக் கற்றுக்கொண்டனர்.

அருட்தந்தை மகேஷ்
செயலர்

வின்சென்ட்-தே-பவுல் சபை

சபை பாதுகாவலர் மற்றும் நிறுவனர் திருநாள் கொண்டாட்டம்

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் திருநாள் கொண்டாட்டம் 27-09-2026 அன்று மறைமாவட்டத்திநன் பல்வேறு ஆலயங்களில் திருப்பலியுடன் நடைபெற்றது. திருப்பலியின் முன்னுரை, காணிக்கை பவனி தொடர்ந்து வாசகங்கள், மன்றாட்டுக்கள் வின்செந்திய உறுப்பினர்களால் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் அனைத்து உறுப்பினர்களும் உறுதிமொழி புதுப்பித்துக் கொண்டனர்.

புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் கொண்டாட்டம்...

தக்கலை மத்திய சபையின் சார்பில் 27.09.26 ஞாயிற்றுகிழமை, மாலை 4.00 மணிக்கு சகாய நகர் ஓசானம் முதியோர் இல்லம் சந்திக்கப்பட்டது. முதியோர் இல்ல தலைமை அருள் சகோதரி, முதியோர் இல்ல செயல்பாடுகள் குறித்து விளக்கினார். மத்திய சபை உறுப்பினர்கள் முதியோர்களை சந்தித்து அவர்களோடு தேநீர் அருந்தி அவர்களுக்காக செபித்து நலத்திட்ட உதவியும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளில், பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் கிளை சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மருத்துவ உதவி

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் கிளைச்சபை சார்பில் விபத்து காரணமாக இடுப்பு எலும்பு முறிந்து படுக்கையில் உள்ள சகாய மாதா உறவியத்தைச் சார்ந்த ஒரு நபருக்கு மருத்துவ உதவியாக 20.09.26 அன்று ரூபாய் 10,000 வழங்கப்பட்டது. ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை அஜின் ஜோஸ் மற்றும் கிளை சபை உறுப்பினர்கள் திரளாக பங்கேற்றனர்.

சகோ. மெரின் சுஜித்
செய்தி தொகுப்பாளர்

மறைமாவட்டச் செய்திகள்

அருட்தந்தையர்களுக்கான கூட்டம்

தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம் 2026 செப்டம்பர் 16 அன்று தக்கலை, சங்கமம் (Sangamam) வளாகத்தில் நடைபெற்றது. அருட்தந்தை. சான்ஜோ தேனேப்ளாக்கல் அவர்கள் நற்கருணை ஆராதனையை வழிநடத்தினார். காலை 11.00 மணிக்கு கூட்டம் தொடங்கியது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். பேரருட்தந்தை. டோஜி பறம்பில்பறம்பில் அவர்கள் அறிக்கையை சமர்ப்பித்தார். தொடர்ந்து, துறைகளின் இயக்குநர்கள் செயல்பாடுகள், வரவிருக்கும் நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களைச் சமர்ப்பித்தனர்.

இறையழைத்தல் முகாம்

குருத்துவ மற்றும் துறவற வாழ்வை ஊக்குவிக்கும் நோக்கில், 2026 செப்டம்பர் 30, புதன்கிழமை, களியல் புனித மரியன்னை மறைவட்ட ஆலயத்தில் சிறப்பு முகாம் நடைபெற்றது. காலை 9.15 மணிக்கு வருகைப் பதிவுடன் தொடங்கிய இந்நிகழ்வை, பேரருட்தந்தை மேத்யூ ஆரேக்களம் CMI அவர்கள் தொடங்கி வைத்தார். குழித்துறை மறைமாவட்ட அருட்தந்தை பிரைட் அவர்கள் முதல் அமர்வை வழிநடத்தினார். மதிய உணவிற்குப் பின், மறைமாவட்ட இறைஅழைத்தல் ஒருங்கிணைப்பாளர் அருள்தந்தை சான்ஜோ தேனேப்ளாக்கல் அவர்கள் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன், பாடல்கள், கருத்துரைகள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் பொழுதுபோக்குச் செயல்பாடுகள் போன்ற பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றது. நிறைவில், அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் நிறைவுரையை வழங்கினார். களியல் மறைவட்ட இறையழைத்தல் இயக்குனர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டியன் அவர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வழிநடத்தினார்.

மறைவட்டச் செய்திகள்

சூசைபுரம்

புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம் – சூசைபுரம்

ஆகஸ்ட் 30 ஆம் தேதி துவங்கப்பட்ட பாப்புலர் மிஷன் தியானம் செப்டம்பர் மாதம் 04 ஆம் நாள் வரை தொடர்ந்து நடந்தது.

செப்டம்பர் ஒன்று முதல் மூன்று வரை காலை 5.55 க்கு குறிப்பிட்ட இடங்களிலிருந்து உறவியம் வாரியான பவனி தொடங்கப்பட்டு ஆலயத்தை வந்தடைந்தது. காலை 6.00 மணிக்கு ஜெப வழிபாடு ஆரம்பிக்கப்பட்டு. 6.15 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நற்செய்தி பவனியும் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு பவனியும் அதனைத் தொடர்ந்து நற்செய்தி பகிர்வும் நடந்தன. இறுதி நாளான செப்டம்பர் 04 அன்று 4.55 மணிக்கு அனைத்து இறை மக்களும் கைகளில் சிலுவை ஏந்தியவாறு பேராலய அமைவிடத்தில் ஒன்று கூடினர். பேராலய பணிகளுக்காக ஜெபித்த பின்னர் வெற்றிப்பவனியாக ஆலயம் நோக்கி சென்றனர். அன்று திருமணமானவர்கள் தங்கள் திருமண வாக்குறுதியை புதுப்பித்துக் கொண்டனர்; சிறப்பு காணிக்கை எடுக்கப்பட்டது. நற்செய்தி பகிர்வு அனைத்தும் முடிந்த பின்னர் மக்கள் தங்கள் வீடுகளில் செய்து கொண்டுவரப்பட்ட பலகாரங்களை பகிர்ந்து உண்டு நிறைவோடு வீடு திரும்பினர்.

05.09.2026 காலை 6.15 மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் அனைத்து ஆசிரியர்களுக்காகவும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்காகவும் சிறப்பாக ஜெபிக்கப்பட்டது.

08.09.2026 - அன்னை மரியாள் பிறப்பு திருநாள் திருப்பலியானது காலை 6.15 மணிக்கு நடைபெற்றது. 13.09.26 - ஞாயிற்றுக்கிழமை திருப்பலி மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் சிறப்பிக்கப்பட்டது. மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கடவுளின் வாய்ச்சொல் வினாடி-வினாப் போட்டி இரவு 8 மணிக்கு இணையம் வழி நடத்தப்பட்டது. 14.09.2026 - சிலுவை புகழ்ச்சி திருநாள் திருப்பலி காலை 6.15 மணிக்கு நடைபெற்றது. திருப்பலியில் சிலுவை முத்தம் செய்யும் நிகழ்வும் நடைபெற்றது.

புனித தோமையார் ஆலயம் – மாதாபுரம்

செப்டம்பர் 17 அன்று டிஜோபபின் ஜாஸ்மின் வினிதா ஆகியோர் மகன் ஜான் டாபின் ஜெயினுக்கு பங்குத்தந்தை குரியன் அவர்களால் திருமுழுக்கு வழங்கப்பட்டது.

தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

செப்டம்பர் 03 அன்று திருவிழாவை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு திருப்பலி அதைத்தொடர்ந்து நற்கருணை ஆராதனை ஒப்புரவு அருளடையாளம் நடைபெற்றது. செப்டம்பர் 04 அன்று மாலை 6.00 மணிக்கு செபமாலை, நவநாள் அதைத் தொடர்ந்து திருவிழா திருக்கொடியேற்றுதல் நடைபெற்றது. செப்டம்பர் 11 அன்று திருப்பலி முடிந்தவுடன் அருட்தந்தை குரியன் கருத்தேடம் அவர்கள் தலைமையில் மாபெரும் தேர்ப்பவனி நடைபெற்றது. செப்டம்பர் 13 அன்று மாலை 7.00 மணிக்கு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில் அவர்கள் தலைமையில் மறைக்கல்வி ஆண்டுவிழா நடைபெற்றது. பங்குத்தந்தை குரியன் கருத்தேடம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கலை நிகழ்ச்சிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றன.

கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

2026 செப்டம்பர் 1 முதல் 8 நோன்பு சிறப்பாக பங்கில் கடைபிடிக்கப்பட்டது. தினமும் ஜெபமாலை மற்றும் திருப்பலி நடைபெற்றது. எட்டாம் நாள் மாலை 6 மணிக்கு சிறப்பு திருப்பலி ஜெபமாலைப் பவனி நேர்ச்சை உணவு என நோன்பு சிறப்பிக்கப்பட்டது. மாதாவின் மகத்துவங்கள் என்னும் தலைப்பில் வினாடி வினா போட்டி 13 ஆம் தேதி பங்கில் நடைபெற்றது. பங்கு திருவிழாவை முன்னிட்டு அருட்தந்தை அஜின் ஜோஸ் தலைமையில் வீடு சந்திப்பு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 18 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அருள்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் தலைமையில் மாதாந்திர தியானமும் 27 ஆம் தேதி புனித வின்சென்ட் தே பவுல் திருநாளும் பங்கில் சிறப்பிக்கப்பட்டது.

மஞ்சாலுமூடு

புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு

அன்னை மரியாவின் பிறப்பு திருவிழாவை முன்னிட்டு 8 நோன்பு சிறப்பாக கொண்டாடப்பட்டது. கடைசி நாளில் ஆலயத்தில் செபமாலை பவனியும் இறுதியில் நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது.

புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

20.09.2026 அன்று காலை திருப்பலிக்கு பின் புனித அன்னை தெரசாவின் திருநாள், புனித கன்னி மரியாவின் பிறப்பு திருநாள், சிலுவை புகழ்ச்சி திருநாள் என முப்பெரும் விழா பங்குத்தந்தை லூக்கா கொல்லம்பரம்பில் CMI தலைமையில் கொண்டாடப்பட்டது. 08.09.2028 அன்று அன்னை மரியாவின் பிறப்பை ஒட்டிய எட்டு நோன்பு கொண்டாட்டம் நிறைவு பெற்றது.

திரு குடும்ப ஆலயம் – முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல் திரு குடும்ப ஆலயத்தின் மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி திருத்தலத்திற்கு 6.9.2026 அன்று திருப்பயணம் செல்லப்பட்டது. அங்கே நடந்த ஒப்புரவு மற்றும் நற்கருணை ஆராதனைகளில் கலந்து கொண்டு ஆசீர் பெறப்பட்டது இதில் பங்குதந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்கள் மற்றும் அருள் சகோதரிகள் தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

படந்தாலுமூடு

திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

மாதாவின் பிறந்த நாளை முன்னிட்டு 1.9. 2026 முதல் 8. 9. 2026 வரை ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. இறுதி நாள் திருப்பலியைத் தொடர்ந்து ஜெபமாலைப் பவனியும் நடைபெற்றது. 11.9. 2026 அன்று மேழக்கோடு ஆலயத்திற்கு திருப் பயணம் செல்லப்பட்டது. சுமார் 30 பேர் கலந்து கொண்டார்கள். 20.09.2026 அன்று பங்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் திருவிழா வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டது.

புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

செப்டம்பர் 11 அன்று பங்குமக்கள் மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி, ஆலயத்திற்கு திருப்பயணம் செல்லப்பட்டது. திருப்பயணத்தில் சுமார் 40 பேர் கலந்து கொண்டார்கள்.

▶ புனித மரிய கொரைற்றி ஆலயம் – அதங்கோடு

அன்னை மரியாவின் பிறந்தநாளை முன்னிட்டு செப்டம்பர் 01 முதல் 08 வரை மாலை 6:30 மணிக்கு குருசடியில் செபமாலை நடைபெற்றது. இறுதி நாளாகிய செப்டம்பர் 08 அன்று ஆடம்பர செபமாலை பவனியும் நடைபெற்றது.

▶ புனித தோமையார் ஆலயம் – பளுகல்

பளுகல், புனித தோமையார் ஆலயத்தில் மாதாவின் பிறப்பு திருவிழா செப்டம்பர் 8 ஆம் தேதி மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்குதந்தை அருட்தந்தை ஜோசப் முதுபிளாக்கல் அவர்கள் தலைமையில் ஒவ்வொரு நாளும் மாலை 6.00 மணிக்கு செபமாலை, திருப்பலி அதைத் தொடர்ந்து குருசடியில் நவநாள் செபமும் நடைபெற்றது. ஆறாம் நாள் வாகனங்கள் மந்திரிப்பு நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. இறுதி நாள் மாலை 6.00 மணிக்கு பெண் குழந்தைகள் கையில் அலங்கரித்த மெழுகுவர்த்தியுடன் செபமாலைப்பவனி சிறப்பாக நடைபெற்றது.

▶ புனித மார்டின் டி போரஸ் ஆலயம் – கழுவன்திட்டை

1.9.2026 முதல் 8.09.2026 வரை மாதாவின் பிறந்த நாளை முன்னிட்டு மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது.

இறுதி நாள் ஆடம்பர ஜெபமாலை பவனி நடைபெற்றது. 11.9.2026 அன்று மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக மேழக்கோடு ஆலயத்திற்கு திருப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 15 தாய்மார்கள் இத்திருப் பயணத்தில் கலந்து கொண்டார்கள்.

▶ புனித மத்தேயு ஆலயம் – அன்னிக்கரை

47 ஆவது ஆலயத் திருவிழா 2026 செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 04 வரை சிறப்பாக நடைபெற்றது. செப்டம்பர் 25 அன்று பங்குதந்தை முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் திருக்கொடியேற்றினார்கள். ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு குருசடியின் முன் ஜெபமாலையும் 6:00 மணிக்கு நவநாள் செபமும், அதனைத் தொடர்ந்து ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது. இரண்டாம் மற்றும் நான்காம் நாள் திருப்பலிக்கு பின் நற்செய்தி பெருவிழா அருள்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஐந்தாம் நாள் திருப்பலிக்கு பின் அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. ஆறு,

எழு மற்றும் எட்டாம் நாள் திருப்பலிக்குப் பின் பக்த இயக்கங்களில் ஆண்டு விழாவும், ஒன்பதாம் நாள் திருப்பலிக்கு பின் ஆடம்பர ஜெபமாலைப் பவனியும், இறுதி நாளன்று காலை 9.00 மணிக்கு பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் இராசை திருப்பலியும் நடைபெற்றது. அன்று மதியம் 12.30 மணிக்கு திருக்கொடி இறக்குதல் நடைபெற்றது. அதன் பின் மாலை 6:30 மணிக்கு ஜெபமாலையும் அதனை தொடர்ந்து மறைக்கல்வி இயக்கத்தின் ஆண்டு விழா பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

களியல் மறைவட்டம்

▶ புனித மரியன்னை ஆலயம் – களியல்

களியல் புனித மரியன்னை மறைவட்ட ஆலய திருவிழா, ஆகஸ்ட் மாதம் 28 தொடங்கி செப்டம்பர் மாதம் 6 வரை மிக சிறப்பாக நடைபெற்றது.

▶ திரு இருதய ஆலயம், பள்ளிக்கோணம்

3.9.2026 மாதா நவநாளை முன்னிட்டு ஆலயத்தில் உறவியங்கள், மற்றும் பக்த இயக்கங்கள் சார்பாக செப்டம்பர் 8 வரை தினமும் மாலை 6 மணிக்கு ஜெபமாலை புகழ் மாலை தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. மரியாவின் சேனை இயக்கம் சார்பாக களியல் மறைவட்ட அளவில் மாதாவின் திரு சொரூபம் அனைத்து இல்லங்களிலும் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதன்படி காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் இருந்து பள்ளிக் கோணம் திரு இருதய ஆலயத்தில் 6.9.2026 ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தது. காரோடு பங்குத்தந்தை மற்றும் மரியாவின் சேனை இயக்க உறுப்பினர்கள் வருகை தந்தனர். பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்குப் பேரவை உறுப்பினர்கள், இறை மக்கள் இணைந்து சிறப்பான வரவேற்பு மற்றும் ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டது.

20.9.2026 அன்று மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட்டு மதிப்பிட மறைமாவட்ட ஊக்குவிப்பாளர் வருகை புரிந்தார்.

30.9.2026 "சிகரம் நோக்கி - என் எதிர்காலம் என் கையில்' என்ற இறை அழைத்தல் பயிற்சி வகுப்பு களியல் மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது பள்ளிக்கோணம் பங்கில் இருந்து 13 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

▶ புனித தோமையார் ஆலயம் – மாறப்பாடி

மாதாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 8 வரையிலான நாட்களில் ஆலயத்தில் காலை 5.45 மணிக்கு ஜெபமாலையும் அதனை தொடர்ந்து சிறப்பு திருப்பலியும் மாதாநவநாளும் நடைபெற்றது.

ஒவ்வொரு நாளும் உறவியங்கள் மற்றும் பக்த இயக்கங்கள் ஆலய வழிபாடுகள் மற்றும் ஜெபமாலையும் வழி நடத்தினார்கள். செப்டம்பர் 8 அன்று மாலை 6.00 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதனைத் தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. இறுதியாக அனைவருக்கும் சகாயமாதா உறவிய இறைமக்கள் சார்பாக சிற்றுண்டி வழங்கப்பட்டது.

செப்டம்பர் 20 ஞாயிறு அன்று மறைக்கல்வி மாணவர்களுக்கு பங்களவில் போட்டிகள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது.

செப்டம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை அன்று புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. வின்சென்திய சகோதரர்கள் இணைந்து காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையம் பார்வையிட்டு நிதியுதவி வழங்கினர்.

செப்டம்பர் 29 அன்று இளையோர் இயக்கம் சார்பாக பங்குதந்தை தலைமையில் இளையோர்கள் பெருஞ்சிலம்பு சென்றனர்.

▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் தேவாலயத்தில், அன்னை மரியாவின் பிறப்பு திருவிழாவையொட்டி, செப்டம்பர் மாதம் முழுவதும் ஒவ்வொரு வீடுகளிலும் உறவியம் வாயிலாக செபமாலை நடத்தப்பட்டது. செப்டம்பர் 8 அன்று அன்னை மரியாவின் பிறப்பு திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 6.00 மணிக்கு சிறப்பு திருப்பலியும், தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி ஆடம்பர செபமாலை பவனியும், மரியன்னை சிறப்பு நவநாள் செபமும் நடைபெற்றது. இறுதியில் அன்பின் விருந்து நடைபெற்றது. அனைத்து நிகழ்வுகளையும் புனித கன்னிமரியாள் உறவிய மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

தக்கலை – பிலாங்காலை மறைவட்டம்

▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

மாதவின் பிறந்தநாளை முன்னிட்டு செப்டம்பர் 08 அன்று மாலை 6.00 மணிக்கு திருப்பலி மற்றும் ஜெபமாலை பவனி நடைபெற்றது. செப்டம்பர் 12 இரண்டாவது சனிக்கிழமை அன்று நோயாளிகளுக்கான சிறப்பு திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது.

▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – காட்டாத்துறை

4 செப்டம்பர் 2026 மாதத்தின் முதல் வெள்ளி, குருசடியில் சிறப்பு நவநாள் மற்றும் திருப்பலி சிறப்பாக நடைபெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து இறைமக்களுக்காக அன்பின் விருந்து நடைபெற்றது.

செப்டம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை, மாதர் ஜோதிஸ் இயக்கம் தலைமையில், மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி ஆலயத்திற்கு திருப்பயணம் நடைபெற்றது. இதில் சுமார் 30 பேர் கலந்து கொண்டனர்.

செப்டம்பர் 08 செவ்வாய்க்கிழமை, தூய கன்னி மரியாவின் பிறப்பு விழா பங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருப்பலி, நவநாள் மற்றும் திருச்செபமாலை பவனி நடைபெற்றன. மரியாவின் சேனை உறுப்பினர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்திருந்தனர்.

செப்டம்பர் 13 அன்று, பிலாங்காலை ஆலயத்தில் நடைபெற்ற உறவியத் தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான கூட்டத்தில் உறவிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

திருவிழாவிற்கான ஆன்மிகத் தயாரிப்பாக, 17 முதல் 19 செப்டம்பர் 2026 வரை மூன்று நாட்கள் நற்செய்திப் பெருவிழா பங்கில் நடைபெற்றது. அருட்தந்தை பிலிப் SAC மற்றும் அவரது குழுவினர் நிகழ்ச்சிகளை வழிநடத்தினர்.

செப்டம்பர் 20 அன்று குருசடித் திருவிழா கொண்டாடப்பட்டது.

பேரருட்தந்தை ஆண்றனி ஜோஸ் அவர்கள் திருப்பலியை நிறைவேற்றினார். திருப்பலியைத் தொடர்ந்து அன்பின் விருந்து நடைபெற்றது.

25 செப்டம்பர் 2026 அன்று ஆலயத்தின் ஆண்டு திருவிழா கொடியேற்றத்துடன் சிறப்பாகத் தொடங்கியது. பங்குத்தந்தை, அருட்தந்தை.டோஜி கொழுவகண்டத்தில் அவர்கள் ஆலயக் கொடியை ஏற்றினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருப்பலியை நிறைவேற்றினார்.

புனித அன்னை தெரசா ஆலயம் – கல்லுவிளை

கல்லுவிளை, புனித அன்னை தெரசா ஆலய குடும்ப விழா, செப்டம்பர் 4ஆம் தேதி திருக்கொடியேற்றத்துடன் தொடங்கி, 6ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவின் முதல் நாள் அருட்தந்தை ஜான் ஜோசப் அவர்களும், இரண்டாம் நாள் அருட்தந்தை ரெனி CMI அவர்களும் மூன்றாம் நாள் அருட்தந்தை செபி மேத்யூ அவர்கள் தலைமையிலும் செபமாலை, சிறப்புத் திருப்பலி மற்றும் மறையுரை நடைபெற்றது. செப்டம்பர் 5ஆம் தேதி நடைபெற்ற திருப்பவனியில் பங்குமக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். இவ்விழா, இறைநம்பிக்கையையும் குடும்ப ஒற்றுமையையும் மேலும் வலுப்படுத்தியது.

நித்திரவிளை

புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

செப்டம்பர் 1 முதல் 8 வரை ஒவ்வொரு நாளும் மாலை 6.00 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து மாதாவின் நவநாள் செபமும் நடைபெற்றது. செப்டம்பர் 4 அன்று திருப்பலிக்கு பின் முதல் வெள்ளி தியான உரை, நற்கருணை ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளம் நடைபெற்றது. செப்டம்பர் 6 அன்று நித்திரவிளை மறைவட்ட அளவில் நடைபெற்ற உறவிய பொறுப்பாளர்களுக்கான கூட்டத்தில் உறவிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். செப்டம்பர் 8 அன்று மாதாவின் பிறப்பு திருவிழாவை முன்னிட்டு மாலை 6:30 மணிக்கு திருப்பலியும் மாதாவின் நவநாள் செபம் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. செப்டம்பர் 20 அன்று மறைமாவட்டத்தின் புதுவாழ்வு இயக்க

இயக்குனர் அருட்தந்தை முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் வருகை தந்து புது வாழ்வு இயக்கத்தின் நோக்கம் மற்றும் அந்த பயன்களை குறித்து எடுத்து கூறினார்.

- **புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை**

செப்டம்பர் 8 அன்று மாதாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு மாலை சிறப்பு திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்கு பின் நவநாள், செபமாலை பவனி நடைபெற்றது. அனைவருக்கும் நேர்ச்சை உணவு பரிமாறப்பட்டது. அன்றைய நாள் திருப்பலியில் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்கள் தலைமையேற்று நிகழ்வை வழி நடத்தினார். செப்டம்பர் 14, திங்கட்கிழமை திருச்சிலுவையின் புகழ்ச்சி திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா

தென்காசி மறைத்தள செய்திகள்

மாதாந்திர தியானம்

செப்டம்பர் மாத தியானம் மேக்கரை, புனித ஜார்ஜியார் ஆலயத்தில் 13 ஆம் தேதி நடத்தப்பட்டது காலை 9:30 மணி அளவில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. புது வாழ்வு தியான இல்லத்தை சார்ந்த சகோதரர் எட்வின் அவர்கள் தியான உரை வழங்கினார். அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் மற்றும் இறை மக்கள் இதில் பங்கெடுத்து இறையாசீர் பெற்றுச் சென்றனர்.

வரவிருக்கும் நிகழ்வுகள்

அக்டோபர் 04 – 8 : அருட்தந்தையர் வருடாந்திர தியானம்

அக்டோபர் 18 : உலகளாவிய மறைபரப்பு ஞாயிறு

அக்டோபர் 25 : மறைமாவட்ட செபமாலை பவனி

MONTHLY AGENDA - OCTOBER 2026		
DATE	**DAY**	**EVENTS**
1	Thu	VC : Vocation camp
2	Fri	**SVP :** Cleaning camp
3	Sat	**SMYM :** Leadership training **ASc :** Staff Orientation Programme **VC :** Vocation camp (Padanthalumoodu)
4	Sun	**VC :** Vocation Promotor visit – Kaliyal Forane **CML:** Celebrate the feast of St. Therese of Child Jesus in units **STI :** Class **SVP :** CC Meeting
5	Mon	**FA :** Doctor's Visit **Pass :** Teacher's Day Celebration
8	Thu	**KKSSS :**Organ Donation camp & Awareness Programme
9	Fri	**FA :** Marriage Preparation Course **CAT :** Forane Directors' Meeting, Sangamam
10	Sat	**FA :** Marriage Preparation Course **MJ : F**orane Leaders Meet **TM :** Mission Meet **CAT :** Forane Secretaries' Online Meeting
11	Sun	**KKSSS:** International Girl Child Day Celebration **URM :** Parish Visit **CAT :** Bible Fest writing competition Forane Level **SMYM :** Forane election **SVP :** AC Meeting
13	Tue	**CAT :** Forane Directors Meet
16	Fri	**KKSSS :** SHG –World Food Day Celebration
17	Sat	**KKSSS :** Educare Class **SMYM :** Youth Retreat

18	Sun	**KII :** Forane level monthly activity **SMYM :** Youth Retreat & Patron's Day Celebration **CML :** Mission Collection Day in units **STI :** Class **CAT :** First Semester Viva Examination Std. X, XI & XII **SVP :** Conference Presidents Meet
19	Mon	**KKSSS :** World Palliative Care Day Celebration **HC :** World Food day Celebration **SMYM :** Youth Retreat **FA : D**octor's Visit
24	Sat	**SINAI :** One day Retreat **KII :** Seminar for Animators and Organizers **AIDACT :** Special School Teachers Seminar **TCSL :** Sports Day **PC :** Official Inauguration of Arulthoothu News Channel and Entertainment Channel
25	Sun	**MS :** Rosary Procession **URM :** Kaliyal Forane Animators & Organizers meeting **SMYM :** Patron's Day Celebration Parish level **SVP :** AC Annual Day
26	Mon	**ET:** Mission Meet
31	Sat	**CAT :** HM Meet

Fr. Antony Jose, Co-ordinator

BISHOP'S ENGAGEMENTS - OCTOBER 2026

DATE	DAY	TIME	EVENTS
4 - 9			**Sangamam: Annual Retreat**
9	Fri		**Bishop's House**
10	Sat		**Mezhacode :** Jubilee Qurbana at FCC Convent
11	Sun	02.00 pm	**Vanchinagar :** CMC Convent chapel blessing
12	Mon	11.00 am 2.00 pm	Cumbum : Chindalacherry, Blessing of Ahasaparavakal Home Meeting with Priests of the Extended territory >> Madurai
13	Tue		**Visiting:** Virudunagar, Kayathar, Thirunelveli and Nangunerry
14	Wed		**Bishop's House :** Curia Meeting
15	Thu		Bishop's House
16	Fri		Bishop's House
17	Sat		Bishop's House
18	Sun		Bishop's House
Oct 19 - Nov 8			**Visit to UK and Ireland**

Fr. Sunil Antony,

Secretary to Bishop

நமது பேராலயத்திற்காக செபிப்போம்

Life Orientation Programme
at Padanthalumoodu and Kaliyal Foranes

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570